சிமெண்ட் நிறுவனங்களுக்கு சுண்ணாம்புக்கல் சுரங்க குத்தகை.

519—(*வினா எண். 10486) திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள சிமெண்ட் நிறுவனங்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ள சுண்ணாம்புக்கல் சுரங்கங்கள் சுரங்கச் சட்டத்தின்படி 20 ஆண்டுகால இடைவெளியில் புதுப்பிக்கப்படாத காரணத்தால் சுரங்கங்களில் வேலைவாய்ப்பும் சிமெண்ட் தொழிற்சாலைகளில் உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளதென்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கனிமக் கொள்கையை செவ்வனே செயல்படுத்த, ஏற்கனவே சுண்ணாம்புக்கல்லை அகழ்ந்தெடுக்க உரிமம் வழங்கப்பட்ட பிரதம சிமெண்ட் ஆலைகளுக்கு, அரசின் கனிமக் கொள்கைப்படி அதிகபட்சமாக ஆறு ஆண்டுகளுக்கு சுரங்கக் குத்தகை புதுப்பிக்கப்பட்டு வருகிறது. ஆகவே சுரங்க வேலைவாய்ப்பும் சிமெண்ட் உற்பத்தியும் பாதிக்கப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். பி. மணவாளன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல சிமெண்ட் ஆலைகள், சுரங்கக் குத்தகையைப் புதுப்பிக்கக் கோரி அரசுக்கு விண்ணப்பங்கள் அனுப்பி பல மாதங்களாக அப்படியே இருக்கிறது. இது தவிர தமிழ்நாட்டில் புதிய மினி சிமெண்ட் ஆலைகள் துவக்க மத்திய அரசிடம் அனுமதி பெற்று அதற்காக சுண்ணாம்புக்கல்லை வெட்டி எடுக்க புதியதாக உரிமங்கள் கோரி வந்த விண்ணப்பங்கள் எல்லாம் பரிசீலனை செய்யப்படாமல் நீண்ட நாட்களாக இருக்கின்றன. நான் அமைச்சரைக் கேட்டுக் கொள்வதெல்லாம் தமிழகத்தின் தொழில் வளர்ச்சியைக் கருதி, அந்த மினி சிமெண்ட் பாக்டரிகளுக்கு புதிய உரிமங்கள் கொடுக்கின்ற வகையிலும் பழைய உரிமங்களை புதுப்பிக்கின்ற வகையிலும் விரைவாக அரசு நடவடிக்கை எடுக்குமா ? ஏனென்றால் ஆந்திர மாநிலத்தில் மினி

1987 ஏப்ரல் 28]

சிமெண்ட் பாக்டரிகளுக்கு அவர்கள் நிறைய உரிமங்கள் தந்து அங்கு தயாராகும் சிமெண்டுகள் தமிழகத்திலே நிறைய விற்கப் பட்டு வருகின்றன. ஆகவே விரைவாக விண்ணப்பங்களை கவனித்து நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திர மாநிலத்திலும், மத்திய பிரதேசத திலும் நிறைய சுண்ணாம்புக்கற்கள் இருக்கின்றன. அந்த அள வுக்கு தமிழ்நாட்டில் இல்லை என்பதை நான் உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் பெரிய சிமெண்ட் ஆலை களுக்கு அனைத்து விண்ணப்பங்களும் இந்த அரசால் வரவேற்கப் பட்டன. ஒன்பது விண்ணப்பங்கள் வந்தன. ஆறு புதிய ஆலைகள் திறக்க மத்திய அரசின் தொழில் நுட்ப மேம்பாட்டு இயக்ககம் அனுமதி வழங்கி இருக்கிறது. அதிலே இரண்டு சிறிய சிமெண்ட் ஆலைகள் உற்பத்தியைத் தொடங்கி இருக்கின்றன.

திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது, அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகச் சொன் னார்கள். மதுக்கரையில் இருக்கின்ற ஏ.சி.சி. சிமெண்ட் தொழிற்சாலைக்கும் அதுபோல அரியலூருக்குப் பக்கத்தில் இருக்கிற மினி சிமெண்ட் ஆலைக்கும் கொடுக்கப்பட்ட லைசன்சுகள் இன்னும் புதுப்பிக்கப்படாமல் தற்காலிகமாக கொடுக்கப்பட்டு வருகிறதே. அந்த நிலையை மாற்றுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-30)

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, மதுக்கரை சிமென்ட் ஆலைக்கு சுண்ணாம்புக் கல் தரப்படுகிற குறிப்பு என்னிடத்தில் இல்லை. மதுக்கரையில் அசோசியேட். சிமெண்ட் கம்பெனி விண்ணப்பித்து இருக்கிறார்கள். சுண்ணாம்புக்கல் வெட்டியெடுக்கும் குத்தகையைப் பொறுத்த வரையில் மூன்று சுரங்கக் குத்தகைகளைப் புதுப்பிக்க அவர்கள் விண்ணப்பித்து இருக்கிறார்கள். அவை அரசினுடைய ஆய்வில் இருக்கின்றன.

[1987 ஏப்ரல் 28

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: (பேரவைத் துணைத் தலைவர்): தலைவர் அவர்களே, 6 ஆண்டு காலத்திற்கு உரிமங்கள் வழங்கப்படுகின்றன என்ற விவரத்தைச் சொன்னார்கள். சில பிரபல சிமெண்ட் ஆலைகள் தங்கள் தேவைக்கு மேல் பல இடங்களில் 100 ஏக்கர், 200 ஏக்கர் என்று லைசென்ஸ் வாங்கி வைத்துக்கொண்டு உபயோகப்படுத்தாமல் இருக்கிறார்கள். மற்ற ஆலைகள் வருவதையும் தடுக்கிற நிலையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆறாண்டு காலம் அல்லது பத்தாண்டு காலமாக இருந்தாலும் உரிமம் வழங்கி ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் வேலை துவங்கவில்லையென்றால் அதனை ரத்து செய்கிற நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, அது அரசினுடைய பரிசீலனையில்தான் இருக்கிறது. டால்மியா சிமென்ட்ஸ் நிறுவனம் அதிக உரிமங்களை வைத்திருக்கிறது. அதற்கு திருச்சி மாவட்டத்திலும், பெரிய நகரங்களிலும் இருக்கிற சுரங்கக் குத்தகையை புதுப்பிக்கும் விண்ணப்பத்தை அரசு நிராகரித்து, அதைத் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்திற்கு ஒதுக்கியிருக்கிறது. அந்தமாதிரியான வேலைகளை அரசு மேற்கொண்டிருக்கிறது.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: தலைவர் அவர்களே, அண்ணா மாவட்டம், பாளையத்தில் சிமெண்ட் ஆலை நிறுவ வேண்டுமென்று பல ஆண்டுகளாக கோரிக்கை வைக்கப்பட்டு, அது சம்பந்தமாக மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் இடையில் பல தட்வை பேச்சுவார்த்தைகள் நடந்திருக்கின்றன. எனவே பாளையத்தில் ஒரு சிமெண்ட் ஆலை அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, நேற்று முன்தினம் நடைபெற்ற தொழில் மானியத்தில் அதுபற்றி குறிப்பிட்டு இருக்கிறேன். பாளையத்தில் சிமெண்ட் ஆலை அமைக்க அரசு ஆய்வு செய்து வருகிறது.

1987 ஏப்ரல் 28]

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, மதுக்கரை அசோசியேட் கம்பெனி, சுண்ணாம்புக் கல்லை வெட்டியெடுக்கிற உரிமையைப் பெற்று அந்தப் பகுதியில் இருக்கிற மலை முழுவதையும் நீண்டகாலமாக தங்கள் கையில் வைத்திருக்கிறார்கள். அதனைப் புதுப்பித்தும் வருகிறார்கள். குறைந்த மூலதனத்தைக் கொண்டு மினி சிமெண்ட் ஆலைத் தொழிலை செய்ய வரக்கூடியவர்களுக்கு ஊக்கம் அளிக்கக்கூடிய முறையில், குறைந்த விலையில் அவர்களுக்கு மூலப்பொருளாக இருக்கிற சுண்ணாம்புக் கல் கிடைப்பதற்கு அவர்களுக்கு உரிமம் வழங்குவதில் அதற்குரிய கட்டணங்களைக் குறைத்து சலுகை காட்டப் படுமா? அதிகமாக கற்கள் டெபாசிட் இருக்கிற இடத்திலிருந்து அவர்கள் அதனைக் கொண்டு வருவதற்கு அனுமதி கொடுத்து அந்தச் சிறு தொழிலை வளர்ப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே. மதுக்கரை சிமெண்ட் ஆலையைப் பொறுத்தவரையில் இது ஒரு தனியார் நிறுவனமாகும். ஆகவே உரிமம் கிடைப்பதில் எந்த சங்கடமும் இருக்காது. எங்கே சுண்ணாம்புக் கல், சிமெண்ட் கிரேடு கிடைக்கிறதோ அவைகளையெல்லாம் சிமெண்ட் தொழிற் சாலைகளுக்கு ஒதுக்குவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது.

கோவை மாவட்டத்தில் உலக வங்கி குடிநீர்த் திட்டம்.

520—(*வினா எண். 11556) திரு. மா. சின்னராசு: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள உலக வங்கி குடிநீர்த் திட்டத்தில் (பவானி ஆற்றுத் திட்டம்) காரமடை ஒன்றியத்தில் பயன்பெறும் கிராமங்கள் எத்தனை?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கி உதவியோடு செயல்படுத்த இருக்கும் அத்திக்கடவு திட்டத்தில், காரமடை ஊராட்சி